10.11.2025

அ.வ.எண்.820/2017

வா.சா.1 - திரு.துரைராஜ், த/பெ. கே.எஸ்.கந்தசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 10.11.2025 is accordance with the provision of Act X of 3331

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 2ம் அயிட்ட சொத்தானது எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் ராசக்காள் சென்னியாண்டவர் கோவிலுக்கு உயில் எழுதி வைத்துள்ளார். அந்த டிரஸ்டின் பெயர் அருள்மிகு சென்னியாண்டவர் கோவில் ஆகும். 2ம் அயிட்ட சொத்தை பொறுத்து, எனக்கோ என் தகப்பனாருக்கோ சாட்சியம் அளிக்க எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் டிரஸ்டின் சார்பாக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் இல்லை. டிரஸ்டின் சார்பாக எந்த பதவியிலும் இல்லாத நான் சாட்சியம் அளிக்க தகுதியில்லாத நபர் என்றால் சரியல்ல. வழக்குரையில் சொத்து சென்னியாண்வடர் கோவில் டிரஸ்ட்டுக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. எனக்கும், டிரஸ்ட்டுக்கும் ஏதேனும் உறவு உள்ளதா என்றால் என் தகப்பனார் அதில் உறுப்பினராக உள்ளார். நான் அந்த டிரஸ்ட்டில் தலைவரோ, செயலாளரோ, பொருளாளரோ இல்லை என்றால் சரிதான். நான் டிரஸ்ட்டுக்கு தொடர்பில்லாத 3ம் நபர் என்றால் எனக்கு உரிமை உள்ளது, ஆனால் பொறுப்பு இல்லை. உரிமை எதன் மூலம் உள்ளது என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் சிறப்பு காரணம் உள்ளதா என்றால் இல்லை, கோவில் பரம்பரையானது.

3. நானோ, 1ம் பிரதிவாதியாகிய என் தகப்பனாரோ டிரஸ்ட் சொத்தை உரிமை கொண்டாடுவதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், எனவே டிரஸ்ட் பத்திரத்தை வைத்து சொத்து எங்களுக்கும் சொந்தம் என உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 அறக்கட்டளை பத்திரத்தில்

அறக்கட்டளை சம்மந்தமாக வெளி நபர்கள் சாட்சியம் அளிக்க முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். டிரஸ்ட் 2006 ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. டிரஸ்ட் பத்திரத்தில், உள்ள டிரஸ்டின் நோக்கங்கள் என்ன என்றால் 1. விஷேச காலங்களில் தண்ணீர் பந்தல் அமைக்க வேண்டும், 2. தைப்பூசத்தன்று மூன்று நாட்கள் தங்கி தண்ணீர் பந்தல் அமைத்து தண்ணீர் கொடுக்க வேண்டும், 3. கோவிலை பராமரிக்க வேண்டும், 4. கோவில் சம்மந்தமான பணிகளை செய்ய வேண்டும், 5. வைத்தியசாலை கட்டுதல், நிர்வகித்தல் என உள்ளது என்றும் அவ்வாறு வைத்தியசாலை கட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நிர்வகிக்கவில்லை, மருத்துவ பணிகளை மேற்கொள்ளவும் இல்லை.

4. டிரஸ்ட் சார்பாக, ஆசிரமம் ஏற்படுத்துவது, முதியோர் இல்லம் ஏற்படுத்தி நிர்வகிப்பது, ஆன்மீக குழுவிலான முதியோர் இல்லாம் ஏற்படுத்தி நடத்துவது, முதியோர் வகுப்புகள் ஏற்படுத்தி நடத்துவது போன்ற நோக்கங்களை இதுவரை செய்யவில்லை என்றால் சரிதான். முக்கிய நோக்கமானது, 1. சென்னிமலை ஆண்டவர் கோவிலுக்கு வருவபவர்களுக்கு தண்ணீர் பந்தல் அமைத்து, தண்ணீர் கொடுக்க வேண்டும். வா.சா.ஆ.4 ஆவணத்தில் முக்கிய நோக்கம், முக்கியமற்ற நோக்கம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. திருமண மண்டபம் ஏற்படுத்தி அன்னதானம் செய்வது போன்ற செயல்களை இதுவரை செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. எத்தனை திருமண மண்டபவங்கள் டிரஸ்ட் சார்பாக கட்டப்பட்டு நடத்தி வரப்படுகிறது என்றால் திருமண மண்டபம் இல்லை, ஆனால் அன்னதான மண்டபம் உள்ளது. அன்னதான மண்டபம் டிரஸ்ட் சார்பாக ஏற்படுத்தப்பட்டதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் தனிப்பட்ட உரிமை கோரவில்லை என்றும், அது டிரஸ்டில் உள்ள அனைவருக்கும் பாத்தியப்பட்டது அதை இடையூறு செய்வதால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என் தகப்பனார் தான் சாட்சியம் அளிக்க தகுதியானவர் என்றும், நான் தகுதியற்றவர் என்றால் சரியல்ல. சொத்து சம்மந்தமாக வழக்கு சம்மந்தமாக எனக்கோ என் தகப்பனாரருக்கோ அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை, வாய்மொழியாக பேசியுள்ளோம்.

6. என்னுடைய பிராதில் வாய்மொழியாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொத்தை அபகரிக்க வேண்டி சொத்தில் வாய்மொழியாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி டிரஸ்ட்டை நடத்த என் தகப்பனாருக்கும், எவ்வித அதிகாரமும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். டிரஸ்ட் நிர்வாகம் எவ்வித அதிகாரம் வழங்காத நிலையில் 2ம் அயிட்ட சொத்து குறித்து சாட்சியம் அளிக்க எனக்கோ, என் தகப்பனாருக்கோ உரிமையில்லை என்றால் சரியல்ல. டிரஸ்ட்டில் மொத்தம் 9 நபர்கள் உறுப்பினர்கள் ஆவார்கள். என் தகப்பனார் நிர்வாக உறுப்பினராக இருந்தார். டிரஸ்ட்டின் தலைவர் யார் என்றால் டிரஸ்ட் ஆரம்பிக்கும்போது சின்னப்பன் இருந்தார், அதன் பின்னிட்டு பதவி ஒவ்வொரு முறையும் மாற்றப்பட்டது. எங்களது டிரஸ்டில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை டிரஸ்டின் உறுப்பினர்களின் பதவி மாற்றப்படும் என்றால் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆகும்.

7. 2006 ம் ஆண்டு முதல் வழக்கு தாக்கல் செய்யும் வரை எங்களுடைய டிரஸ்ட் நல்ல முறையில் இயங்கி கொண்டிருந்தது என்றும், டிரஸ்டின் நோக்கங்களை செயல்படுத்தும் விதத்தில் அதன் உறுப்பினர்களும், பதவி வகித்த நபர்களும் செயல்பட்டு வந்தார்கள் என்று காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கான ஆவணம் உள்ளது. 2ம் அயிட்ட சொத்தானது எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் ராசக்காள் சென்னியாண்டவர் கோவிலுக்கு உயில் எழுதி வைத்துள்ளார். ராசாக்காளுக்கும், 2ம் அயிட்ட சொத்திற்கும் என்ன சம்மந்தம் என்றால் ராசாக்காளுக்கு அவரது தகப்பனாரிடம் இருந்து வந்தது. ராசாக்காளின் தகப்பனார் பெயர் சரியாக நினைவில்லை.

8. ராசக்காளின் தகப்பனார் சொத்து என்பதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், உயில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். ராசாக்காள், மற்றும் அம்மாசை கவுண்டருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் சரியாக தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 28.11.1923 தேதியிட்ட அம்மாசை கவுண்டர், ஈரோடு மாவட்டம் சென்னியாண்டவர் கோவிலுக்கு மட்டுமே பாத்தியம் என எழுதி வைத்த விருப்பு ஆவணம் என்றால் இல்லை, மடம் என்று

உள்ளது. மேற்படி அம்மாசை கவுண்டர் தானே தண்ணீர் பந்தல் அமைத்து நிர்வகிப்பது என்றும், அவருக்கு பின்னிட்டு அவரது வாரிசுகள் அதை செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், 1975 ம் ஆண்டில் இருந்து எங்களது குடும்பம் வாதி, பிரதிவாதிகள் சேர்ந்து நிர்வகித்து வருகிறோம். 1975 ம் ஆண்டில் இருந்து எங்களது குடும்பம் வாதி, பிரதிவாதிகள் சேர்ந்து நிர்வகித்து வருகிறோம் என வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நிர்வகித்து வருகிறோம் என்பதை காட்டுவதற்கான எந்த வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. அம்மாசை கவுண்டர் 2ம் அயிட்ட சொத்துக்களை பொறுத்து யாரும் அடமானம் வைக்கவோ, விற்கவோ, வில்லங்கம் ஏற்படுத்தக்கூடாது என்று அவ்வாறு ஏற்படுத்தினாலும் செல்லாது என வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் வில்லங்கம்எதுவும் ஏற்படுத்தவில்லை, அதில் டிரஸ்ட் ஏற்படுத்தியுள்ளோம். **28.11.1923 அம்மாசை கவுண்டர் எழுதிவைத்த தண்ணீர் பந்தல் தர்மசாசன செட்டில்மெண்ட் பத்திரம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ராசாக்காள் எழுதிவைத்ததாக சொல்லும் உயில் எப்போதும் நடைமுறைப்படுத்த தக்கதல்ல என்றும், உயில் ஆவணம் எழுதிவைக்க ராசாக்காளுக்கு எவ்வித உரிமையோ, முகாந்திரமோ தகுதியோ இல்லை என்றால் சரியல்ல. விருப்பு ஆவணம் எழுதிய அம்மாசை கவுண்டரின் விருப்பதற்கு மாறாக ராசாக்கள் எழுதிவைத்த உயில் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

10. டிரஸ்டானது 2006 முதல் நல்ல முறையில் இயங்கி வருகிறது என்பதை காட்ட எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நல்ல முறையில் இயங்கி வருகிறது. டிரஸ்டின் வங்கி கணக்கு எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. டிரஸ்டின் வங்கி கணக்கு எண் எனக்கு தெரியாத நிலையில் டிரஸ்ட் நல்ல முறையில் இயங்கி வருகிறது என நான் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. என் தகப்பனாரான 1ம் வாதிக்கு டிரஸ்டின் வங்கி கணக்கு எண் தெரியுமா என்றால் கேட்டு பார்க்க வேண்டும். டிரஸ்ட் ஆரம்பித்தது முதல் தற்போது வரை டிரஸ்ட் சார்பாக எந்த வங்கி கணக்கும் ஆரம்பிக்கவில்லை என்றும், அவ்வாறு வங்கி கணக்கு இருந்திருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால்

சரியல்ல.

11. டிரஸ்ட் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது என்றும், அதன் பண கையிருப்பு எவ்வளவு என்றால் ஒவ்வொரு வருடமும் தைப்பூசம் முடிந்து கணக்கு வழக்கு பார்த்து அதை DECLARE செய்வோம். அந்த கணக்கு வழக்கு பட்டியலை தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. அந்த கணக்கு வழக்கு நோட்டில் யாரெல்லாம் கையொப்பம் செய்வார்கள் என்றால் உறுப்பினர்கள் மற்றும் மற்ற இதர நபர்களும் கையொப்பம் செய்வார்கள். நான் இந்த டிரஸ்டின் உறுப்பினர் இல்லாத காரணத்தினாலும், நான் டிரஸ்ட்டிற்கு தொடர்பில்லாத 3ம் நபர் என்றும், எனக்கு டிரஸ்ட் பற்றி தெரியாது என்றும் எனவே இது சம்மந்தமாக சாட்சியம் அளிக்க தகுதியான நபர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur